# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/76 - 2016 නොවැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2016.11.11

*1992/76 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி 15/2016*

**(357ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையுடனும் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச்சட்டத்தின் 29 ஆம், 155 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2016, நவெம்பர் 10.

**ஒழுங்கு விதிகள்**

*1989, யூன் 15 ஆந் திகதிய 562/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டதுமான 1981 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் கோவை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-*

(1) 10(1) ஆம் ஒழுங்குவிதியில், (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இ) பந்தி (ஆ) வினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக குறைந்தபட்ச கணிதகு சேவையைப் பூர்த்தி செய்யாதவரும், இலங்கைத் தரைப்படையின் கிரமமான படை, கிரமமான ஒதுக்குப் படை, தொண்டர் படை அல்லது தொண்டர் ஒதுக்குப் படையைச் சேர்ந்தவருமான எவரேனும் ஆண் அலுவலர் அல்லது பெண்அலுவலர், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைகளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்து, இராணுவச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு தரைப்படை மருத்துவச் சபையினால்

தீர்மானிக்கப்படுமிடத்தும், மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்படுமிடத்தும், விடுவிக்கப்படுமுன்னர் அவரது அல்லது அவளது சேவைக்காலப்பகுதி எவ்வாறிருப்பினும், 4 ஆம் ஒழுங்குவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்றுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் பத்து (10) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்தி செய்துள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) பந்தி (இ) குறிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் :-

(i) ஆண் அலுவலர் ஒருவரின் விடயத்தில் சேவையிலிருந்து விடுவிக்கப்படும் தேதியன்று தொடங்கி அத்தகைய அலுவலர் ஐம்பத்தைந்து (55) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ; அத்துடன்

(ii) பெண் அலுவலர் ஒருவரின் விடயத்தில் விடுவிக்கப்படும் தேதியன்று தொடங்கி அத்தகைய பெண் அலுவலர் நாற்பத்தைந்து (45) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ;

விடயத்திற்கேற்ப அவரது அல்லது அவளது சேவையின் காலப்பகுதியுடன் சேர்க்கப்பட்டு அதற்கிணங்க கணிப்பிடப்பட்ட ஓய்வூதியமொன்று அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் அதற்கிணங்க மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(உ) பந்தி (ஈ) இன் ஏற்பாடுகள், பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆண் அலுவலர் அல்லது பெண் அலுவலரின் ஓய்வூதியத்தைக் கணிப்பதில், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்துள்ளவரும் இராணுவ சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு தரைப்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்பட்டவருமான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஊ) பந்தி (இ) இன் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக வந்துள்ள ஆளொருவர், இவ்வொழுங்குவிதி நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள் 2014, திசெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து மட்டுமே அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுவதற்கு உரித்துள்ளவராக இருந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.''

(2) 22(1) ஆம் ஒழுங்குவிதியில், (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இ) பந்தி (ஆ) வினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக குறைந்தபட்ச கணிதகு சேவையைப் பூர்த்தி செய்யாதவரும், இலங்கைத் தரைப்படையின் கிரமமான படை, கிரமமான ஒதுக்குப் படை, தொண்டர் படை அல்லது தொண்டர் ஒதுக்குப் படையைச் சேர்ந்தவருமான எவரேனும் போர் வீரர் அல்லது போர் வீராங்கனை, நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைகளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்து, இராணுவச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு தரைப்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படுமிடத்தும், மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்படுமிடத்தும், விடுவிக்கப்படுமுன்னர் அவரது அல்லது அவளது சேவைக்காலப்பகுதி எவ்வாறிருப்பினும், 21(2) ஆம் ஒழுங்குவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்றுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் பன்னிரெண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்துள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) பந்தி (இ) குறிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் :-

(i) போர் வீரர் ஒருவரின் விடயத்தில் அத்தகைய அலுவலர் சேவையிலிருந்து விடுவிக்கப்படும் தேதியில் தொடங்கி அவர் ஐம்பத்தைந்து (55) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ; அத்துடன்

(ii) போர் வீராங்கனை ஒருவரின் விடயத்தில் அத்தகைய அலுவலர் விடுவிக்கப்படும் தேதியில் தொடங்கி அவர் நாற்பத்தைந்து (45) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ;

விடயத்திற்கேற்ப அவரது கணிதகு சேவைக் காலப்பகுதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படுதலும் வேண்டும் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் அதற்கிணங்க மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(உ) பந்தி (ஈ) இன் ஏற்பாடுகள், பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் தரைப்படை போர் வீரர் அல்லது போர் வீராங்கனையின் ஓய்வூதியத்தைக் கணிப்பதில், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்துள்ளவரும் இராணுவ சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு தரைப்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்பட்டவருமான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஊ) பந்தி (இ) இன் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக வந்துள்ள ஆளொவருவர், இவ்வொழுங்குவிதி நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அவர் அல்லது அவள், 2014, திசெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து மட்டுமே அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுவதற்கு உரித்துள்ளவராக இருந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.''

*11-1289/1*

---

*ச.வ.-பி 16/2016*

## *(358ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையுடனும் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச்சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2016, நவெம்பர் 10.

### ஒழுங்குவிதிகள்

1991, மாச்சு 20 ஆந் திகதிய 654/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டதுமான 1981 ஆம் ஆண்டின் கடற்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் கோவை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

(1) 8 (1) ஆம் ஒழுங்குவிதியில், (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

''(இ) பந்தி (ஆ) வினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக குறைந்தபட்ச கணிதகு சேவையைப் பூர்த்தி செய்யாதவரும், இலங்கைத் கடற்படையின் கிரமமான படை, கிரமமான ஒதுக்குப் படை, தொண்டர் படை அல்லது தொண்டர் ஒதுக்குப் படையைச் சேர்ந்தவருமான எவரேனும் ஆண் அலுவலர் அல்லது பெண்அலுவலர், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைகளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்து, கடற்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு கடற்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படுமிடத்தும், மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்படுமிடத்தும், விடுவிக்கப்படுமுன்னர் அவரது அல்லது அவளது சேவைக்காலப்பகுதி எவ்வாறிருப்பினும், 4 ஆம் ஒழுங்குவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்றுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் பத்து (10) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்துள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) பந்தி (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் :-

(i) ஆண் அலுவலர் ஒருவரின் விடயத்தில் சேவையிலிருந்து விடுவிக்கப்படும் தேதியன்று தொடங்கி அத்தகைய அலுவலர் ஐம்பத்தைந்து (55) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ; அத்துடன்

(ii) பெண் அலுவலர் ஒருவரின் விடயத்தில் விடுவிக்கப்படும் தேதியன்று தொடங்கி அத்தகைய பெண் அலுவலர் நாற்பத்தைந்து (45) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ;

விடயத்திற்கேற்ப அவரது அல்லது அவளது சேவையின் காலப்பகுதியுடன் சேர்க்கப்பட்டு அதற்கிணங்க கணிப்பிடப்பட்ட ஓய்வூதியமொன்று அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படுதல் வேண்டும். அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் அதற்கிணங்க மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(உ) பந்தி (ஈ) இன் ஏற்பாடுகள், பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆண் அலுவலர் அல்லது பெண் அலுவலரின் ஓய்வூதியத்தைக் கணிப்பதில், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்துள்ளவரும் கடற்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு கடற்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்பட்டவருமான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஊ) பந்தி (இ) இன் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக வந்துள்ள ஆளொவருவர், இவ்வொழுங்குவிதி நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள் 2014, திசெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து மட்டுமே அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுவதற்கு உரித்துள்ளவராக இருந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்."

(2) 19(1) ஆம் ஒழுங்குவிதியில், (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(இ) பந்தி (ஆ) வினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக குறைந்தபட்ச கணிதகு சேவையைப் பூர்த்தி செய்யாதவரும், இலங்கைத் கடற்படையின் கிரமமான படை, கிரமமான ஒதுக்குப் படை, தொண்டர் படை அல்லது தொண்டர் ஒதுக்குப் படையைச் சேர்ந்தவருமான எவரேனும் கடற்படை வீரர் அல்லது வீராங்கனை, நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைகளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்து, கடற்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு கடற்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படுமிடத்தும், மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்படுமிடத்தும், விடுவிக்கப்படுமுன்னர் அவரது அல்லது அவளது சேவைக்காலப்பகுதி எவ்வாறிருப்பினும், 18 (2) ஆம் ஒழுங்குவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்றுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் பன்னிரண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்துள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஈ) பந்தி (இ) குறிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் :-

(i) கடற்படை வீரர் ஒருவரின் விடயத்தில் அத்தகைய அலுவலர் சேவையிலிருந்து விடுவிக்கப்படும் தேதியில் தொடங்கி அவர் ஐம்பத்தைந்து (55) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ; அத்துடன்

(ii) கடற்படை வீராங்கனை ஒருவரின் விடயத்தில் அத்தகைய அலுவலர் விடுவிக்கப்படும் தேதியில் தொடங்கி அவர் நாற்பத்தைந்து (45) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ;

விடயத்திற்கேற்ப அவரது கணிதகு சேவைக் காலப்பகுதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படுதலும் வேண்டும். அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் அதற்கிணங்க மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(உ) பந்தி (ஈ) இன் ஏற்பாடுகள், பந்தி (அ) அல்லது (ஆ) இல் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் கடற்படை வீரர் அல்லது வீராங்கனையின் ஓய்வூதியத்தைக் கணிப்பதில், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்துள்ளவரும் கடற்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு கடற்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்பட்டவருமான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஊ) பந்தி (இ) இன் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக வந்துள்ள ஆளொவருவர், இவ்வொழுங்குவிதி வலுவுக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அவர் அல்லது அவள், 2014, திசெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து மட்டுமே அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுவதற்கு உரித்துள்ளவராக இருந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.”

*11-1289/2*

---

*ச.வ.-பி 17/2016*

### *(359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 4 ஆம் உறுப்புரையுடனும் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய (359 ஆம் அத்தியாயமான) வான்படைச்சட்டத்தின் 29 ஆம், 155 ஆம் பிரிவுகளின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
*2016, நவெம்பர் 10.*

### ஒழுங்கு விதிகள்

*1991, சனவரி 16 ஆந் திகதிய 654/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டதுமான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் கோவை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-*

*(1)* *8 (3) ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-*

*“(3) (அ) (2) ஆம் பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக குறைந்தபட்ச கணிதகு சேவையைப் பூர்த்தி செய்யாதவரும், இலங்கை வான்படையின் கிரமமான படை, கிரமமான ஒதுக்குப் படை, தொண்டர் படை அல்லது தொண்டர் ஒதுக்குப் படையைச் சேர்ந்தவருமான எவரேனும் ஆண் அலுவலர் அல்லது பெண்அலுவலர், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைகளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்து, வான்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு வான்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படுமிடத்தும், மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்படுமிடத்தும், விடுவிக்கப்படுமுன்னர் அவரது அல்லது அவளது சேவைக்காலப்பகுதி எவ்வாறிருப்பினும், 4 ஆம் ஒழுங்குவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்றுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் பத்து (10) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்துள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.*

*(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் :-*

*(i) ஆண் அலுவலர் ஒருவரின் விடயத்தில் சேவையிலிருந்து விடுவிக்கப்படும் தேதியன்று தொடங்கி அத்தகைய அலுவலர் ஐம்பத்தைந்து (55) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ; அத்துடன்*

*(ii) பெண் அலுவலர் ஒருவரின் விடயத்தில் விடுவிக்கப்படும் தேதியன்று தொடங்கி அத்தகைய பெண் அலுவலர் நாற்பத்தைந்து (45) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ;*

*விடயத்திற்கேற்ப அவரது அல்லது அவளது சேவையின் காலப்பகுதியுடன் சேர்க்கப்பட்டு அதற்கிணங்க கணிப்பிடப்பட்ட ஓய்வூதியமொன்று அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் அதற்கிணங்க மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.*

(இ) பந்தி (ஆ) இன் ஏற்பாடுகள், பந்தி (1) (அ) அல்லது (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் ஆண் அலுவலர் அல்லது பெண் அலுவலரின் ஓய்வூதியத்தைக் கணிப்பதில், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்துள்ளவரும் வான்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு வான்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்பட்டவருமான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) இன் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக வந்துள்ள ஆளொவருவர், இவ்வொழுங்குவிதி நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள் 2014, திசெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து மட்டுமே அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுவதற்கு உரித்துள்ளவராக இருந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்."

(2) 18(5) ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(5) (அ) 19 (1) ஆம் ஒழுங்குவிதியின் பந்தி (ஆ) வினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக குறைந்தபட்ச கணிதகு சேவையைப் பூர்த்தி செய்யாதவரும், இலங்கை வான்படையின் கிரமமான படை, கிரமமான ஒதுக்குப் படை, தொண்டர் படை அல்லது தொண்டர் ஒதுக்குப் படையைச் சேர்ந்தவருமான எவரேனும் வான்படை வீரர் அல்லது வீராங்கனை, நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைகளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்து, வான்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு வான்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படுமிடத்தும், மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்படுமிடத்தும், விடுவிக்கப்படுமுன்னர் அவரது அல்லது அவளது சேவைக்காலப்பகுதி எவ்வாறிருப்பினும், 18 (2) ஆம் ஒழுங்குவிதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓய்வூதியமொன்றுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் பன்னிரெண்டு (12) ஆண்டுகளைக் கொண்ட கணிதகு சேவையைப் பூர்த்திசெய்துள்ளாரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) குறிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் :-

(i) வான்படை வீரர் ஒருவரின் விடயத்தில் அத்தகைய அலுவலர் சேவையிலிருந்து விடுவிக்கப்படும் தேதியில் தொடங்கி அவர் ஐம்பத்தைந்து (55) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ; அத்துடன்

(ii) வான்படை வீராங்கனை ஒருவரின் விடயத்தில் அத்தகைய அலுவலர் விடுவிக்கப்படும் தேதியில் தொடங்கி அவர் நாற்பத்தைந்து (45) வயதை அடையும் தேதியன்று முடிவுறும் காலப்பகுதியும் ;

விடயத்திற்கேற்ப அவரது கணிதகு சேவைக் காலப்பகுதியுடன் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க கணக்கிடப்பட்ட ஓய்வூதியமொன்று அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படுதலும் வேண்டும் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் அதற்கிணங்க மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) இன் ஏற்பாடுகள், பந்தி (1) (அ) அல்லது (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்படும் எவரேனும் வான்படை வீரர் அல்லது வான்படை வீராங்கனையின் ஓய்வூதியத்தைக் கணிப்பதில், நடவடிக்கைசார் கடமைகளை அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு எவையேனும் சட்ட வலுவுறுத்தற் கடமைளைப் புரிகையில் அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக உறப்பட்ட ஊறுகளின் விளைவாக அங்கவீனமுடையவராக வந்துள்ளவரும் வான்படைச் சேவைக்குத் தகுதியற்றவரென ஒரு வான்படை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மருத்துவ ஏதுக்களின் மீது முறையாக விடுவிக்கப்பட்டவருமான ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(ஈ) (அ) என்னும் பந்தியின் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராக வந்துள்ள ஆளொவருவர், இவ்வொழுங்குவிதி நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முன்னர் சேவையிலிருந்து ஏலவே விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அவர் அல்லது அவள், 2014, திசெம்பர் 17 ஆந் திகதியிலிருந்து மட்டுமே அத்தகைய ஓய்வூதியம் செலுத்தப்படுவதற்கு உரித்துள்ளவராக இருந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

11-1289/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.